1975 ஏப்ரல் 7]

உடை, பெரியார் அவர்கள் பயன்படுத்திய நாற்காலி, கட்டில், பேனா, பலகை, லென்ஸ் ஆகிய பொருள்களும் அங்கே வைக்கப் படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், பெரியார் தேசிய இயக்கத்திலே இருந்த காரணத்தினாலே இந்தியா பூராவுமே அவரை ஈரோட்டு நாயக்கர் என்றுதான் அழைத்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே அவருக்கு ஈரோட்டிலே நினைவுச் சின்னம் அவர்களுக்கு அமைப்பது சாலச் சிறந்ததுதான். ஆனால் அவருடைய கருத்துக்கள் தெரிவித்துள்ள அறிவுரைகள் எல்லாம் இப்போது தமிழிலேதான் அவருடைய பிரசங்கங்கள் பூராவும் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன, அந்தப் புத்தகங்களையெல்லாம் ஆங்கிலத்திலே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அது மட்டுமல்ல, வைக்கத்திலே அவர் சத்தியாக்கிரகம் நடந்தபோது என்ன நடந்தது என்று அவர் சாவதற்கு 6 மாதத்திற்கு முன்னாலே தான் ரேடியோவிலே கேள்வி பதில் என்ற முறையிலே பல விஷயங்கள் சொன்னார்கள். அதிலேயும் உள்ள விஷயங்களை டேப் ரிக்கார்டு எடுத்து வெளியிடுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போதுதான் பெரியார் பிறந்த இல்லத்தை பெரியார் அண்ணா இல்லமாக மாற்றி பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் அந்த இல்லம் மூலமாக வெளியிட முயற்சி செய்து வருகிறோம். திரு. கே. டி. கே. அவர்கள் தெரிவித்த யோசனைகள் நல்ல யோசனைகள், அவைகளை யெல்லாம் படிப்படியாக செயல்படுத்த அரசு முயற்சி செய்யும்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, பகுத்தறிவுச் சிங்கமான தந்தை பெரியார் அவர்களுக்கு மாநில அரசு அமைக்கிற நினைவுச் சின்னத்தைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அறியக்கூடிய முறையில் மத்திய அரசு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துச் சொல்லியிருந்தது, அதைப்பற்றி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்ற ஆண்டு அதைப் பற்றி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினேன். இந்த ஆண்டு காலம் போதுமானதாய் இல்லை, மீண்டும் நினைவுபடுத்துங்கள்